# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

# 1988 ஆம் ஆண்டின் 76 ஆம் இலக்க, பகிரங்க ஆதனத்துக்கெதிரான தவறுகள் (திருத்தச்) சட்டம்

*[1988, திசெம்பர் மாதம் 17 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

*1988 திசெம்பர் 23 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 45 தபாற் செலவு : சதம் 75

1988 ஆம் ஆண்டின் 76 ஆம் இலக்க, பகிரங்க ஆதனத்துக்கெதிரான தவறுகள் (திருத்தச்) சட்டம்

[1988, திசெம்பர் மாதம் 17 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ.—ஓ 21/85

1982 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, பகிரங்க ஆதனத்துக்கெதிரான தவறுகள் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக.—

1. இச்சட்டமானது, 1988 ஆம் ஆண்டின் 76 ஆம் இலக்க, பகிரங்க ஆதனத்துக்கெதிரான தவறுகள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம். சுருக்கப்பெயர்.

2. இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பிடுசெய்யப்படும் 1982 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, பகிரங்க ஆதனத்துக்கெதிரான தவறுகள் சட்டத்தின் 5 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவினை உட்புகுத்துவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :— 1982 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கச் சட்டத்தின் 5 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"(3) பகிரங்க ஆதனமாகவுள்ள களவாடப்பட்ட ஏதேனும் ஆதனத்தை, அது களவாடப்பட்ட ஆதனமென்பதை அறிந்துகொண்டு அல்லது அது களவாடப்பட்ட ஆதனமென நம்புவதற்குக் காரணம் கொண்டு, நேர்மையற்றமுறையில் பெறுகின்ற அல்லது வைத்திருக்கின்ற ஆள் எவரும், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஓராண்டுக்குக் குறையாததும் ஆனால் இருபது ஆண்டுகளை விஞ்சாததுமான ஒரு காலத்துக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனையினாலும் அத்துடன் ஆயிரம் ரூபா அல்லது எந்த ஆதனம் தொடர்பில் அத்தகைய தவறு புரியப்பட்டதோ அந்த ஆதனத்தினது பெறுமதியின் மும்மடங்கு ஆகியவற்றுள் எது கூடியதோ அக்குற்றப்பணமொன்றினாலும் தண்டிக்கப்படுதலும் வேண்டும்."

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவானது இத்தால் உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன் அது 5அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :— முதன்மைச் சட்டவாக்கத்தில் 5அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

"குறித்துரைக்கப்பட்ட எழுத்தை அடையாளத்தை அல்லது செதுக்குகையைத் தாங்கியுள்ள ஆதனம் பகிரங்க ஆதனமாக விருத்தல். 5அ. இச்சட்டத்திற் குறிப்பிடுசெய்யப்பட்ட தவறொன்று தொடர்பான எவையேனும் நடவடிக்கைகளில் எவ்வாதனம் தொடர்பாக அத்தவறு புரியப்பட்டதாகச் சாட்டப்படுகின்றதோ அவ்வாதனம் இதற்கான அட்டவணையில் காட்டப்பட்டுள்ள ஏதேனும் எழுத்தை, அடையாளத்தை அல்லது செதுக்குகையைத் தாங்கியிருக்கின்றதென எண்பிக்கப்படுமிடத்து, மாறானது எண்பிக்கப்படும்வரை, அத்தகைய ஆதனமானது பகிரங்க ஆதனமென ஊகிக்கப்படுதல் வேண்டும்".

2—எ 098819—3,000 (08/87)

முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவைத் திருத்துதல்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவானது, "கொள்ளை" என்பதன் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"களவாடப்பட்ட ஆதனம்" என்பது தண்டனைச் சட்டக்கோவையில் உள்ள பொருளைக் கொண்டுள்ளது.".


முதன்மைச் சட்டவாக்கத்துக்கு ஓர் அட்டவணையை உட்புகுத்தல்.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவினை உடனடுத்துப் பின்வரும் அட்டவணையானது உட்புகுத்தப்படுகின்றது:—

" அட்டவணை (பிரிவு 5அ)



அல்லது



".